தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 22 ஜனவரி 2022 கனி 2




MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

**பாடம்** : 25
**தலைப்பு** : பாக்கியவான்கள் - Blessed
**வேத வாசிப்பு** : வெளிப்படுத்தல் 1:1-3

1. இவர்களெல்லாரும் பாக்கியவான்கள் - வெளி.1:3
2. கர்த்தர் மேல் நம்பிக்கை - சங்.146:5
3. கர்த்தருக்குள் மரிப்போர் - வெளி.14:13

குடும்பமாக
கர்த்தருடைய
பணியைச் செய்ய
ஒப்புக்கொடுக்கப்பட்ட
கிறிஸ்துவின் சபை ஊழியர்கள்
தேவை
63793 50509



இவர்களுடைய
ஊழியத்திற்காக ஜெபியுங்கள்


S.Elavarasan reagan, Evangelist
CHURCH OF CHRIST
No.20, 5th Street, K.C.Garden
T.V.K.Nagar
CHENNAI - 600 082
Cell:96772 79018
E-Mail:reagan_sic@yahoo.com




**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
**YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509







**THE WORD OF CHRIST**
**Monthly Magazine**
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 22 ஜனவரி - 2022 கனி - 2


ஆசிரியருரை

## அப்போஸ்தலர்களை மாதிரியாக பின்தொடருங்கள்
## Follow Apostoles for an example



கிறிஸ்துவானவர் தம்முடைய மாதிரிக்குப்பின்பதாக அப்போஸ்தலர்களை நமக்கு மாதிரியாக கொடுத்திருக்கிறார். இதை அப்போஸ்தலர்கள் நமக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதிய கடிதத்தில் இதைக்குறித்து படிக்கிறோம். "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்" (பிலி.4:9). சபையை உருவாக்குவதற்கும், உபதேசங்களை போதிப்பதற்கும், ஜனங்களை கர்த்தருக்கு நேராக வழிநடத்துவதற்கும் வேதாகமம் பல மாதிரிகளை நமக்கு காண்பிக்கிறது. அதில் அப்போஸ்தலர்களின் மாதிரி மிகவும் முக்கியமானதாகயிருக்கிறது. அப்போஸ்தல நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டனர் இதற்கு காரணம் என்ன? அங்கே பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டனர். அவர்கள் வசனத்தை கேள்விப்பட்டபடியால் உடனே அதற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டனர். இதையே பவுல் பிலிப்பிய சயைாருக்கு சொல்லுகிறார். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள். நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? எதைச் செய்துகொண்டிருக்கிறோம் என்று நீங்கள் சிந்தித்ததுண்டா? சமாதானத்தின் தேவன் நம்மோடிருக்க அப்போஸ்தலர்களுடைய மாதிரியை நாம் பின்பற்றவேண்டும்.

மேலும், யோவான் குறிப்பிடும்போது; "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்றார்கள் (1யோவா.1:1). அவர்கள் தங்களுடைய சொந்தக்கருத்துக்களை சொல்லவில்லை, நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும் எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தை அதாவது உயிருள்ள வார்த்தைகளை உங்களுக்கு அறிவிக்கிறோம் என்றார்கள். இன்றைக்கு அந்த வார்த்தைக்கு எத்தனைபேர் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆண்டவரும் நான் என் சுயமாய் ஒன்றும் சொல்லுகிறதில்லை பிதாவானவர் எனக்குச் சொன்னவைகளையே

உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். ஆண்டவர் இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டவைகளையே அப்போஸ்தலர்கள் நமக்குச் சொல்லுகிறார்கள். நாமும் அவர்கள் நமக்குச் சொன்னவைகளையே மற்றவர்களுக்கும் சொல்லவேண்டும். இதுவே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆகையால் பவுல் சொல்லும்போது; "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்கிறார் (1கொரி.11:1). இங்கே பவுல் கிறிஸ்துவை தன் சரீரத்தில் தரித்துக்கொண்டு அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிறவராயிருந்தார். ஆகையால் நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல என்று சொல்லுகிறார். இன்றைக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறி முழுவதும் கிறிஸ்துவை விட்டு பிரிந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். முதல் நூற்றாண்டில் உருவான சபையை இன்று பார்ப்பது அரிதாக இருக்கிறது. ஒரு விளையாட்டுப்போட்டியை எடுத்துக்கொள்ளுங்கள் அது அப்படியே தொடர்கிறது. அதில் நவீன வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது ஆனால் அந்தப்போட்டியினுடைய விதிகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. ஏன் சபைகள் மட்டும் வேதாகமத்தையும், அப்போஸ்தலர்களால் முன் சொல்லப்பட்ட வசனங்களையும் விட்டு விட்டு மனிதகோட்பாடுகளுக்கும், மனித பாரம்பரியங்களுக்கும் திரும்புகின்றனர். இது மிகவும் வேதனை அளிக்கும் செய்தியாக இருக்கிறது. சில முதல் நூற்றாண்டு சபைகள் மிகுந்த உபத்திரவத்திலும் அப்போஸ்தலர்களை மாதிரியாக கொண்டும் செயல்பட்டுள்ளது. தெசலோனிக்கேய சபை அதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி" என பவுல் எழுதுகிறார் (1தெச.1:6). சோதனை வந்தவுடன் அநேகர் பின்மாற்றமாகி போய்விடுவார்கள் ஆனால் தெசலோனிக்கேயர் இந்த விஷயத்தில் அப்போஸ்தலர்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறதில் உபத்திரவக்காலத்திலும் சோர்ந்துபோகாமல் பின்பற்றியிருக்கிறார்கள்.

ஆகையால், அப்போஸ்தலர்களையும் அவர்களுடைய மாதிரியையும் பின்பற்றுகிறதில்; "நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக" (பிலி.3;17). நாம் அறியாத காலங்களில் வழிதவறிபோக வாய்ப்புகள் உண்டு. ஆனால் நாம் தேர்ச்சியடைந்த அளவு வசனத்தின்படி நம்மை மாற்றியமைத்துக்கொண்டு தேவசித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நமக்குள் இருக்கவேண்டும். அவர் எப்பொழுதும் தேவனுடையசித்தத்தை நிறைவேற்றுகிறவராக இருந்தார். நமக்குள்ளாக அந்தவிதமான சிந்தை அவசியம் இருக்கவேண்டும். அப்போஸ்தலர்கள் அநேக சபைக்கு மாதிரியாக இருந்தனர். ஆனால் அவர்கள் வேறு அப்போஸ்தலர்களை உருவாக்கவில்லை. இன்றைக்கு அப்போஸ்தலர்களை மாதிரியாக நோக்குகிறோம் என்று சொல்லி அப்போஸ்தல பட்டங்களை உருவாக்குகிறார்கள். அநேக சபைகளில் அப்போஸ்தலர்களை ஏற்படுத்துகிறார்கள். யூதாஸ்காரியோத் என்ற அப்போஸ்தலனுக்குப் பதிலாக மத்தியா என்பவர் சீட்டுபோட்டு தேர்வு செய்யப்பட்டார். இதைக்குறித்து அப்போஸ்தல நடபடிகள் முதலாம் அதிகாரத்தில் படிக்கிறோம். இந்த மத்தியா என்பவன் இயேசுவின் நாட்களில் உயிரோடிருந்த சீஷர்களில் ஒருவன். யோவான்ஸ்நானகன் நாட்கள் முதல் இயேசுவின் உயிர்த்தெழுதல்வரை இருந்தவர்களில் ஒருவன். ஆகையால் இவனை தேர்ந்தெடுத்தார்கள். இயேசுவுக்கும் அவருடைய நாட்களுக்கும் சம்பந்தமில்லாத

ஒருவரை அவர்கள் அப்போஸ்தலர்களாக தெரிந்துகொள்ளவில்லை. இன்றைக்கு தேர்வு செய்யப்படும் அப்போஸ்தலர்கள் இயேசுவின் நாட்களில் இருந்தவர்களா? இல்லையே, அப்படியானால் அவர்கள் அப்போஸ்தலர்களா?

அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள் இதைக்குறித்து வேதாகமும் எச்சரிக்கிறது. "ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுதும் கண்ணீரோடும் சொல்லுகிறேன்" (பிலி.3:18). உபதேச சட்டத்தின்படி நடக்காதவர்கள் கபடமுள்ள வேலையாட்களாக இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை மாற்றிப்போதிப்பதால் சிலுவையின் உபதேசத்திற்கு விரோதமாக செயல்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களாலே சத்தியமார்க்கம் தூஷிக்கப்படுகிறது. இவர்கள் தங்களுடைய சொந்தக்கருத்துக்களையும் உபதேசங்களையும் ஜனங்களுக்குக் கொடுக்கும்படியாக விரும்புகின்றனர். நாங்களும் வேதாகமத்தின்படிதான் ஞானஸ்நானம் கொடுக்கிறோம், சபை நடத்துகிறோம் என்று சொல்லிக்கொண்டே போவார்கள் ஆனால் சொல்லப்பட்டிருக்கிற வேதாகமத்தின்படி சபையை நடத்தமாட்டார்கள். உபதேசிக்கமாட்டார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. "ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப்பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள். அவர்களுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள்" (அப்.5:36,37).

இப்படி முதல் நூற்றாண்டில் இயேசுவைப்போல ஒரு திரளான ஜனங்களை இழுக்கவேண்டும் என்று தங்களுடைய சுயகருத்துக்களை எடுத்துச்சொல்லி அநேகர் வசப்படுத்த நினைத்தனர். ஆனால் அந்த மார்க்கங்கள் எல்லாம் பொறாமையினாலும், தற்புகழ்ச்சியினாலும் ஏற்படுத்தப்பட்டபடியால் அவைகள் அழிந்துபோயின. இன்றைக்கும் அநேக மார்க்கங்கள் தோன்றிக்கொண்டிருக்கிறது. தோன்றிய பல மார்க்கங்கள் அழிந்துகொண்டும் இருக்கிறது. ஆனால் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஜீவனுள்ள மார்க்கம் இன்றும் என்றும் நிலைத்திருக்கும் மார்க்கமாக இருந்து கொண்டிருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் மெய்யாகவே இரட்சிக்கப்படுகிறார்கள். சந்தோஷத்தையும் சமாதானத்தையும் ஜீவனுள்ள மார்க்கத்தை ஏற்படுத்தினவராலே பெற்றுக்கொள்ளுகிறார்கள். மற்றவர்கள் இன்றைய தினம்வரை அதைப்பெற்றுக்கொள்ளாமல் தண்ணீரற்ற மேகங்களைப்போல சுற்றிச் சுற்றி வருகிறார்கள்.

"கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" (2யோவா.9). வேதவசனம் இவ்வளவு தெளிவாக சொல்லப்பட்டிருக்கும்போது, தங்களை கிறிஸ்துவின் உபதேசத்தில் இணைத்துக்கொள்ளாமல், வேறுவிதமாக சிந்திக்கவும் செயல்படவும் விரும்புகின்றனர். இப்படிப்பட்ட உபதேசத்தை உங்கள் வீடுகளில் ஒருவன் கொண்டுவராமல் இருந்தால் அவனை ஏற்றுக்கொள்ளக்கூடாது எனவும் எச்சரிக்கப்படுகிறோம். இன்றைக்கு ஓநாய்களைப்போல உள்ளவர்கள்

ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு மந்தைகளுக்குள்ளாக உலா வருகின்றனர். இவைகளைக் கண்டு ஆடுகள் ஏமாந்துபோய் தன்னைப்போன்ற ஆடுகள் என்று நினைத்துவிடுகிறது. ஆகையால் வசனம் அவர்களைக்குறித்து எச்சரிக்கிறது. இவர்கள் ஒருவகையில் பிசாசின் கருவிகளாக இருக்கிறார்கள். இவர்களுக்காக அவியாத அக்கினிவைக்கப்பட்டுள்ளதாக வேதம் சொல்லுகிறது. ஆகையால் அன்பு வாசகரே, அப்போஸ்தலர்களால் முன் சொல்லப்பட்ட உபதேச சத்தியத்தை ஒருவன் உங்கள் மத்தியில் கொண்டுவராமலிருந்தால் அவனை ஏற்றுக்கொள்ளாதிருங்கள். "நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக்குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்; உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்" (கலா.5:10). ஆகையால் நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாக நடந்துகொள்ளுங்கள். உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விடை காண புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தை நாடுங்கள்.

அதில் ஆதி அப்போஸ்தலர்கள் எப்படி நடந்துகொண்டார்கள். சபைகளில் ஏற்படும் பிரச்சனைகளை எப்படி சரி செய்தார்கள். வேதாகமத்திற்கு விரோதமாக எழும்புகிறவர்களை எப்படி வசனத்தைக் கொண்டு அவர்களை மேற்கொண்டார்கள் என்பதைபற்றி நாம் அறிந்துகொள்ளலாம். குறிப்பாக அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் ஆதி சபையின் செயல்பாடுகளை நமக்கு பட்டியலிட்டுக்காட்டுகிறது. அது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு போதுமானதாக இருக்கிறது. ஆகையால் உங்களுடைய கவனத்தை அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் செலுத்துங்கள். யூதா என்ற தாசன் எழுதின பொதுவான நிருபத்தில்; "நீங்களோ பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள். கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்று உங்களுக்குச் சொன்னார்களே. இவர்கள் பிரிந்துபோகிறவர்களும், ஜென்மசுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே" என யூதா 17-19 ல் நினைப்பூட்டுகிறார். ஆகையால் இவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

**முதல் நூற்றாண்டு சபையார் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தார்களா?**

ஆம், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என அப்போஸ்தலர் நடபடிகள் 2:42-ம் வசனத்தில் படிக்கிறோம். இயேசுவானவர் பரமேறியவுடன் எருசலேமிலே மூவாயிரம் அங்கத்தினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சபை இந்த உபதேசத்தை பின்பற்றியதற்கான ஆதார வசனம் நமக்கு இருக்கிறது. அந்த சபை இன்றும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அது கர்த்தரால் ஆரம்பிக்கப்பட்ட சபை. அதுதான் "கிறிஸ்துவின் சபை". இந்த சபையை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள வேதாகமத்திற்குச் செல்லவேண்டும். உலகமெங்கிலும் இச்சபையானது இருக்கிறது, இவர்கள் புதிய ஏற்பாட்டில் யோவான்4:24-ல் குறிப்பாக கர்த்தர் சொன்னபடி தொழுகை செய்கிறார்கள். இந்த தொழுகை வேதவசனத்தின்படியான தொழுகை. இதை தேவன் ஏற்றுக்கொள்ளுகிறார். இதையே ஆதி அப்போஸ்தலர்கள் செய்தார்கள். நாமும் இப்படியே செய்யவேண்டும் என வேதம் எதிர்பார்க்கிறது. இதன்படி செயல்படாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும். ஆகையால் முதல் நூற்றாண்டு சபையாரைப்போல கவனமாக செயல்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# நான் தேவனிடத்தில் அன்புகூருகிறேன்
# I Love God
*-J.C.Choate*

"நான் தேவனிடத்தில் அன்பு கூருகிறேன்" என்று நீங்கள் எத்தனை முறை சொல்லியிருக்கிறீர்கள்? நீங்கள் நூற்றுக்கணக்கில் ஏன் இன்னும் பல ஆயிரங்கள் முறையாவது அவ்வாறு சொல்லி இருக்கிறீர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கேள்வி என்னவென்றால்; நீங்கள் தேவனிடத்தில் அன்பு கூருகிறீர்களா? இப்பொழுது நீங்கள் ஒருவேளை நீங்கள் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள் என்று நினைக்கலாம், இன்னும் நீங்கள் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்களென்று மற்றவர்களையும் நம்பச் செய்யலாம், ஆனால் நீங்கள் அன்பு கூருகிறீர்களா? "நான் தேவனிடத்தில் அன்பு கூருகிறேன்" என்று சொல்ல ஒரு காரியம் உண்டு உங்கள் அன்பை வெளிப்படுத்துவதற்கு மற்றொரு காரியம் இருக்கிறது. நீங்கள் அக்கறை உள்ளவராக இருக்கும்வரை ஒருவேளை தேவனிடத்தில் அன்பு கூரலாம் ஆனால் அது கர்த்தருடைய அன்பின் உணர்ந்து கொள்ளுதலுக்குள் வருகையில் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்களா?

நீங்கள் தேவனிடத்தில் அன்பு கூருவீர்களென்றால் இந்த கேள்விகளை உங்களுக்கு நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்: நான் தேவனுக்கு கீழ்ப்படிந்திருக்கிறேனா? நான் கர்த்தருடைய சபையில் ஒரு உறுப்பினராக இருக்கிறேனா? ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் தேவனைத் தொழுது கொள்ளுகிறேனா? நான் கிறிஸ்தவ ஜீவியம் ஜீவித்துக் கொண்டிருக்கிறேனா? உங்களுடைய பதில் எதிர்மறையாக இருக்குமேயாகில், பிறகு தேவனுடைய பார்வையில் அவரிடத்திலே அன்பு கூருகிறவர்களாயிருக்கவில்லை. வேறொரு வகையில் சொல்ல வேண்டுமேயாகில் நீங்கள் நேர் மறையாக பதிலளிக்க முடியும் என்றால் நீங்கள் தேவனிடத்தில் அன்பு கூருகிறீர்கள் என்று உலகத்திற்கு மட்டும் சொல்ல முடியாது ஆனால் அதைப் பார்க்கிலும் அதிகமாகச் செய்திருக்கிறீர்கள், அதை நீங்கள் நிரூபணம் செய்திருக்கிறீர்கள்.

சராசரியான நபர் தான் தேவனிடத்தில் அன்பு கூருவதாக உடனடியாக உங்குளுக்குச் சொல்லுவார்கள். ஆனால் உண்மையிலேயே அவர் அவ்வாறு செய்கிறதில்லை ஒருவேளை ஒருவர் கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்ப்படிய மறுப்பாரேயாகில், அவர் எவ்வளவாய் அன்பு கூறுகிறார் என்பது ஒருகாரியமே அல்ல. அவர் தேவனிடத்தில் அன்பு கூருகிறதில்லை என்பதற்கு இதுவே போதுமான நிரூபணமாயிருக்கிறது. வேதாகம அன்பை கீழ்ப்படிதலில் வெளிப்படுத்துகிறது. கர்த்தர் இந்த வழிமுறையின் மூலமாக மனுஷனுடைய அன்பை பரிசோதித்து பார்க்கிறார் என்பது ஒரு உண்மையான காரியமாயிருக்கிறது. இந்த விளக்கத்தின்படியே அநேகர் அப்படிப்பட்ட ஒரு பரிசோதனையில் வெற்றியடைய இயலாதவர்களாயிருக்கிறார்கள்.

இப்பொழுது இந்த தலைப்பிலே கர்த்தர் இவ்விதமாக பேசுகிறார், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனிடத்தில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள்

அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். என்னிடல் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது (யோவான் 14:23-24). மீண்டும் இயேசு: "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனகளக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15) என்றார். ஒருவன் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்தால் அவன் அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவான் என்றும் இன்றும் ஒரு ஆத்துமாவானது அவரிடத்தில் அன்புகூரவில்லையென்றால், அவன் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய மாட்டான் என்பதை நாம் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் தெளிவாக உரைத்திருக்கிறார். மற்றொரு வகையில் இதை சொல்ல வேண்டுமேயாகில் ஒருவன் கர்த்தரிடத்தில் மெய்யாகவே அன்புகூருவானயாகில் அவன் அவருக்குக் கீழ்ப்படிவான். ஆனால் ஒரு தனிப்பட்ட மனுஷன் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதலுள்ளவனாயிருக்க தவறுவானேயாகில், அந்த மனுஷன் தேவனிடத்தில அன்பு கூருகிறவனாக இருக்கிறதில்லை.

ஒருவன் தன் பெற்றோரிடத்தில் அன்புகூருகிறவனாய் இருந்தால், அவன் அவர்களுக்குக் கீழ்ப்படிகிறவனாயிருப்பான் இதைப்போன்று கர்த்தரிடத்தில் அன்பு கூருவதென்பது அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதாயிருக்கிறது மெய்யான அன்பு இவ்வகையான காரிங்களில் ஈடுபாடு உள்ளதாக இருக்குமேயாகில், அது கீழ்ப்படிதலின் காரியங்களுக்கு வரும்பொழுது அங்கே எந்த பிரச்சனையும் இருக்காது. வேதவாக்கியங்களின் படியேயான அன்பு, தேவனுக்கும் அவருடைய குமாரனுக்கும் உரிய உறவில் உள்ள காரியத்தை போன்று ஒருவரை அநேக காரியங்களுக்கு வழி நடத்தும் என்பது குறித்து நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது: "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவான் 3:16,17).

தேவன் மனுஷனுடைய பாவம் நிறைந்த நிலையில் அவனை கண்டபொழுது மனதுருகினார். ஆகையால் அவர் தம்முடைய சொந்த குமாரனை உலகத்திலே அனுப்பினார். மனுஷனை நித்திய அழிவிலிருந்து இரட்சிக்கும்படியான நோக்கமாக கொண்டவராகவே தேவன் இது மெய்யாகவே சம்பவிக்கும் என்று மனுஷனுக்கு வாக்குத்தத்தம் செய்தார். ஆனால் இதை ஏற்றுக் கொள்ளுங்கள்: தேவனோ தம்முடைய அன்பை குறித்து மட்டும் பேசுகிறவராக இருக்கவில்லை அவர் மனுஷனுக்காக தம்முடைய அன்பை குறித்து எந்த ஒன்றும் செய்யாமல் அவர் வார்த்தைகளில் மாத்திரம் தம்முடைய அன்பை வெளிப்படுத்த வில்லை. தேவன் மனுஷனுக்காக வார்த்தைகளினாலே தம்முடைய அன்பை வெளிப்படுத்தினது மட்டும் அல்ல பாவமும் துயரமும் நிறைந்த இந்த கீழான உலகத்தில் சிலுவையிலே மரிக்கும்படியாக தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார். ஆம், தேவன் மனுஷனுக்கான தம்முடைய அன்பை நிரூபணம் செய்தார்.

தேவன் தம்முடைய குமாரனை ஒப்புக்கொடுத்ததினாலே மாத்திரமல்ல,அவர் இன்னும் அதை பல வழிகளில் நன்றாகவே நிரூபித்திருக்கிறார். அதே வேளையில் கர்த்தர் அவருக்கான தம்முடைய அன்பை நிபிக்கும்படியாக அதை குறித்து பேசுகிறவராக மட்டுமல்ல இதன் நிமித்தமாக தம்முடைய கீழ்ப்படிதலினாலும் அர்ப்பணிப்பினாலும் இதை மெய்யாகவே நிரூபிக்கிறார்.

இவ்விஷயங்களில் சொல்லப்பட்டிருக்கிறதை நீங்கள் கண்டபடியே, இன்னும் நீங்கள் தேவனிடத்தில் அன்புகூருவதை குறித்து சிந்திக்கிறவர்களாயிருக்கிறீர்களா? கர்த்தர் இந்த தலைப்பில் என்ன சொல்லியிருக்கின்றாரோ அதை கைக்கொள்வதினால் நீங்கள் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் மெய்யாகவே தேவனிடத்தில் அன்புகூருகிறீர்கள் என்று சொல்ல முடியும் என்று நம்புகிறேன் அவ்வாறு இல்லையென்றால் நீங்கள் தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தி எளிமையான கீழ்ப்படிதலினாலே உங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாக இருக்கிறது. இவ்விஷயத்தில் மாயம் பண்ணுகிறவர்களாய் இராதேயுங்கள். நீங்கள் தேவனிடத்தில் அன்புகூருகிறீர்கள் என்று எல்லாருக்கும் சொல்லவேண்டாம் ஆனால் அதேசமயம் அவருக்குக் கீழ்ப்படிதல் உள்ளவராயிருக்க மறுக்காதீர்கள். தேவனிடத்தில் அன்புகூருவதாக நீங்கள் அவரிடம் சொல்லிவிட்டு அவருக்கு முன்பாக கலகம் செய்கிறவராக இராதேயுங்கள். தேவனுக்கான உங்களுடைய அன்பை நீங்கள் நிரூபிக்க விரும்புவீர்களேயாகில் அதை கிரியையில் வெளிப்படுத்துங்கள், இன்னும் ஒரு பழமொழியானது இவ்விதமக சொல்கிறது, "வார்த்தைகளை பார்க்கிலும் செயல் உரக்க பேசுகிறது" நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதைப் பார்க்கிலும் தேவனுக்கான உங்களுடைய அன்பு உங்களுடைய கிரியைகளை அடிப்படையாக கொண்டதாய் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## *நடப்புச் செய்திகள்*

- **ஈரோடு மாணவிக்கு 3 கோடி ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கிய அமெரிக்க பல்கலைக்கழகம்.**
- **தமிழகத்தில் தற்போது 10 லட்சம்பேர் வசிக்கக்கூடிய நகரங்கள் அதிகரித்து வருகிறது.**
- **பயணிகள் நெருக்கடியை குறைக்கும் வகையில் சென்னை மங்களூர் விரைவு ரயில் உள்பட 4 ஜோடி ரயில்களில் முன்பதிவில்லாத பெட்டிகள் இணைப்பு**

## நான் யார்? – Who Am I?




- நான் தேவனால் ஜீவாத்துமாவானேன்
- என் மனைவி என் விலா எலும்புகளில் ஒன்று
- என்னாலே பாவமும் மரணமும் உலகத்தில் பிரவேசித்தது
- நான் வஞ்சிக்கப்படவில்லை
- தேவன் என்னை நோக்கி நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்
- என்னுடைய மீறுதலினால் மோசேவரைக்கும் மரணமானது பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது
- நான் உயிரோடிந்த நாளெல்லாம் தொளாயிரத்து முப்பது வருஷம்

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



*தற்சோதனை பகுதி - 40*

**40. கணவன் மனைவியைப்பற்றி வேதாகம போதனை என்ன?**

1. அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் ☐ வசன ஆதாரம் ---------
2. புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவிக்க வேண்டியதில்லை ☐ வசன ஆதாரம்--------------------------
3. தெய்வ பயத்தோடு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் ☐ வசன ஆதாரம்------------------------------------------------
4. தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு சில காரியத்தில் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் ☐ வசன ஆதாரம் ---------------------------------
5. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள் ☐ வசன ஆதாரம்-
6. மனைவியானவள் பெலவீன பாண்டமல்ல ☐ வசன ஆதாரம்----------
7. மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள் ☐ வசன ஆதாரம்-------------------------
8. அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படியாதிருந்தாள் ☐ வசன ஆதாரம்------------------
9. புருஷனுடைய சரீரத்திற்கு மனைவியே அதிகாரி ☐ வசன ஆதாரம்-
10. மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அவளே அதிகாரி ☐ வசன ஆதாரம்------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

## வேத அறிவுப்போட்டி 254-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. செருபாபேல், நெகேமியா | - நெகே.12:47 |
| 2. நீதிமானாயிருக்கிறது | - 2தெச.1:6 |
| 3. அத்சாள் | - எஸ்தர் 2:7 |
| 4. இல்லை | - 1தீமோ.1:9 |
| 5. யோபு | - யோபு 23:12 |
| 6. தீமோத்தேயுவுக்கு | - 2தீமோ.4:5 |
| 7. நீதியோடும், சத்தியத்தோடும் | - சங்.76:13 |
| 8. முழுக்குடும்பங்களையும் | - தீத்து 1:11 |
| 9. வேசியின் | - நீதி.7:27 |
| 10. அர்க்கிப்பு | - பிலே.2 |

### சரியான பதில் எழுதியவர்கள்


| | |
|---|---|
| 1. Mrs. வசந்தா ரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 2. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 3. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 4. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 5. E. அதிசயம் | - பனைகுடி |
| 6. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 7. Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 8. Mrs. ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 9. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 10. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |
| 11. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 12. S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 13. Mrs. ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 14. A. டேவிட் | - மதுரை |
| 15. Mrs. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 16. S. செல்வராஜ் சாலமோன் | - திருநெல்வேலி |
| 17. Mrs. பாலின் டேனியல் | - சென்னை |
| 18. R. இராஜேந்திரன் | - கோபி |
| 19. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 20. Sis. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 21. P. சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 22. C. அருள்ராஜ் | - சென்னை |
| 23. Mrs. ஃபிராங்களினா ஜான் | - ஊட்டி |
| 24. J. பிச்சை | - விருதுநகர் |
| 25. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கன்னியாகுமரி |
| 26. J. ஆலிவ் | - கோவை |
| 27. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் | - திருநெல்வேலி |
| 28. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 29. Mrs. ஜேனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 30. Mrs. லீலாஜோசப் | - கோவை |
| 31. Sis. விஜயா காந்தி | - வேலூர் |
| 32. Mrs. பாலின்மார்ட்டின் | - சிவகங்கை |
| 33. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 34. T. ராஜாத்தி | - கோம்பை |
| 35. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 36. D.A. கமலம் | - காரைக்குடி |
| 37. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 38. J. ஜான்சி | - ஆனைமலை |
| 39. Mrs. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 40. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 41. Mrs. ஞானம் பிலிப் | - கோவை |
| 42. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 43.E. ஜாய்ஹெலன் புனிதா | - மேற்கு தாம்பரம் |
| 44. Mrs. ராஜம்மாள் | - சென்னை |
| 45. Mrs. ஜெயாபாணி ஜெபராஜ் | - மேற்கு தாம்பரம் |

## வேத அறிவுப்போட்டி 255-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. அவன் முகத்திலே | - பிர.2:14 |
| 2. மகிமையினாலும், கனத்தினாலும் | - எபி.2:9 |
| 3. ஐயோ! | - ஏசா.:23 |
| 4. கிரியைகளினாலே | - யாக்.2:21 |
| 5. எரேமியா | - எரே.20:9 |
| 6. அக்கினியினாலே | - 1பேது.1:7 |
| 7. எரேமியா | - புலம்.3:24 |
| 8. சாபத்தின் பிள்ளைகள் | - 2பேது.2:14 |
| 9. கர்த்தராகிய ஆண்டவர் | - எசே.18:23 |
| 10. நம்முடையவர்களாயிருக்கவில்லை | - 1யோவா.2:19 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 2. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 3. J. ஆலிவ் | - கோவை |
| 4. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 5. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 6. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 7. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 8. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 9. J. பிச்சை | - விருதுநகர் |
| 10. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 11. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 12. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 13. Mrs. பாலின்மார்ட்டின் | - சிவகங்கை |
| 14. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 15. Sis. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 16. Mrs. ஜாய்சந்திரகாந்தா | - நல்லூர் |
| 17. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 18. A. ஆலிஸ்குணசீலி | - சாயர்புரம் |
| 19. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 20. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 21. Mrs. ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 22. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 23. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 24. Mrs. ஜேன்தர்மராஜன் | - திருநெல்வேலி |
| 25. T. ராஜாத்தி | - கோம்பை |
| 26. E. அதிசயம் | - பனைகுடி |
| 27. J.S. ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 28. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 29. Mrs. பாலின் டேனியல் | - சென்னை |
| 30. Mrs. நவரத்தினம்ஜெயராஜ் | - நாசரேத் |
| 31. Miss. ஏஞ்சலின்நேசமலர் | - சாந்தாபுரம் |
| 32. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 33. Mrs. சந்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 34. R. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 35. S. செல்வராஜ் | - திருநெல்வேலி |
| 36. Mrs. ஜெயபாணிஜெயராஜ் | - மேற்கு தாம்பரம் |
| 37. Bro. ஹரிராகவன் | - திருவள்ளூர் |
| 38. Mrs. ராஜம்மாள் | - சென்னை |
| 39. Mrs. ஃபிராங்களினா ஜான் | - ஊட்டி |
| 40. Mrs. லீலா ஜோசப் | - கோவை |
| 41. Sis. விஜயா காந்தி | - வேலூர் |
| 42. Mrs. ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 43. C. அருள்ராஜ் | - சென்னை |
| 44. Mrs. ஜான்சி | - ஆனைமலை |
| 45. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 46. S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

– *மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -21**

**பிராந்திய சபைகளின் அமைப்பில் ஏற்படும் முன்னேற்றத்தினால் அவைகளின் வகைகள் என்னென்ன?**

**வரைகுறிப்பு**

1. **வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்படாதது**
2. **வேதவாக்கியங்களின்படி அல்லாததும் வடிவமைக்கப்படாததும்**
3. **வேதவாக்கியங்களுக்கு மாறாக வடிவமைக்கப்பட்டது**
4. **வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்பட்டது**

**கலந்துரையாடல்**

**1. வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்படாதது**

எல்லா பிராந்திய சபைகளும் தகுதிவாய்ந்த மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களை கொண்ட முழுமையாக வடிவமைக்கப்பட்டதாய் இருக்கும்படி சகல பிராந்திய சபைகளும் செயல்பட வேண்டியது அவசியமானதாயிருக்கிறது. ஆனால் இதற்கு பல வருடங்கள் ஆகலாம். நாம் இந்த பாடத்தில் பிராந்திரய சபைகளின் வடிவமைப்பில் உள்ள முன்னேற்றத்திற்கு தக்கதாக பிராந்திய சபைகளின் வகைகளை குறித்துப்படிக்க விரும்புகிறோம். இந்த பாடத்தில் நாம் நான்கு வகையான பதங்களை பயன்படுத்துவோம்: "வேதவாக்கியங்களின்படியானது", வேதவாக்கியங்களுக்கு மாறானது", "வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்பட்டது" மற்றும் "வடிவமைக்கப்படாதது". "வேதவாக்கியங்களின்படி" என்பதன் பொருளானது வேதாகமத்தின்படியே குறிப்பிட்ட பிராந்திய சபையின் ஆளுகை நிலை சரியானதாக இருக்கிறது என்பதாகும். "வேதவாக்கியங்களுக்கு மாறானது" என்பதன் பொருள் ஆளுகை நிலை தவறானதாக அல்லது பாவம் நிறைந்ததாக இருக்கிறது என்பதாகும். "வடிவமைக்கப்பட்டது" என்பதன் பொருள் ஒர சபையானது மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் கொண்டதாக இருக்கிறது என்பதாகும். ஒரு "வடிவமைக்கப்படாதது" என்பதன் பொருள் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் இல்லாத சபை என்பதாகும். ஒரு சபையானது ஒருவேளை வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்படாததாக இருக்கலாம். இது தகுதிவாய்ந்த அலுவலர்கள் இல்லாத ஒரு பிராந்திய சபையாக இருக்கிறது. அதன் விளைவாக எவர் ஒருவரும் நியமிக்கப்படாதிருந்திருக்கிறார்கள். தகுதிவாய்ந்தவர்கள் எவர் ஒருவரும் அந்த சபை வேதவாக்கியங்களின்படியானதாக இருந்தும் இது சரியானதாக இருக்கிறது. சபையின் ஆரம்பம் மற்றும் ஆதிகால வரலாற்றில் ஒவ்வொரு பிராந்திய சபையும் ஆலுவலர்கள் இல்லாத நிலை இருந்திருக்கிறது. அது கிறிஸ்துவின் திட்டமாகவும் இருந்திருக்கிறது. இது கிறிஸ்தவ மனுஷர்கள் கர்த்தருக்குள் பலமாக வளர அனுமதிக்கப்பட்ட காலமாக இருக்கிறது. இந்த காலத்தில் சபையானது சபையின் ஆளுகை குறித்த வேதாகம விதிமுறைகளை சபையானது கற்றறிந்து இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சபையானது "வடிவமைக்கப்படாதது" என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால், அந்த சபைக்கு தகுதிவாய்ந்த அலுவலர்கள் இல்லாதிருக்கிறார்கள். பின்னர் இது சம்பவிக்கும், இது தகுதிவாய்ந்த அலுவலர்கள் உடையவர்களாயிருக்கும்பொழுது இப்பொழுது இது முழுவதும் வடிவமைக்கப்பட்டதாயிருக்கிறது. சமயம் இல்லாதிருந்த பொழுது ஒரு

சபையானது அலுவலர்கள் அற்றவர்களாய் இருக்கிறது என்றால் அது ஒரு சபைக்கான மோசமான நிலையாயிருக்கிறதில்லை. வேதாகமத்தில் நாம் சில சபைகள் அலுவலர்களோடிருந்ததையும், மற்ற சபைகளில் அலுவலர்கள் எவர் ஒருவரும் இல்லாதிருந்ததையும் நாம் வாசித்திருக்கிறோம். தகுதியற்ற அலுவலர்கள் இருப்பதை பார்க்கிலும், அலுவலர்கள் இல்லாதிருப்பது அதிக மேன்மையானதான இருக்கிறது. வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்படாத சபையானது இன்னும் தகுதியடையாத மனுஷரை கொண்டதாகவும், இன்னும் அலுவலர்கள் நியமிக்கப்படாததாகவும் இருக்கிறது.

**2. வேதவாக்கியங்களின்படி அல்லாததும் வடிவமைக்கப்படாததும்**

இந்த பிராந்திய சபையானது அலுவலர்கள் இல்லாதிருப்பதினால் வடிவமைக்கப்படாத ஒன்றாயிருக்கிறது. ஆனால் இது வேதவாக்கியங்களின்படி இல்லாததாகவும் அல்லது இந்த நிலையில் தவறானதாகவும் இருக்கிறது. காரணம் தவறானதாயிருக்கிறது. அங்கே தகுதிவாய்ந்த மனுஷர்கள் இருக்கிறார்கள், அவர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் அவர்கள் நியமிக்கப்படாதிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சபைக்கு செயலாற்றக்கூடிய மனுஷரை தகுதியுள்ளவர்கள் ஆக்கும்படியாக பல வருஷங்கள் இருந்திருக்கின்றன. அங்கே மனுஷர்கள் தகுதியுடையவர்களாய் இருக்கிறார்கள், ஆனால் சபையானது அவர்களை நியமிக்காமல் இருந்திருக்கிறது. இதுதான் வேதவாக்கியங்களின்படி இல்லாததாயிருக்கிறது. மனுஷர்கள் மெய்யாகவே தகுதியுடைவர்கள் ஆன உடனே, அவர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஒரு சபையானது அலுவர்கள் இல்லாமல் நன்றாக செயல்பட முடியாது, அது தகுதியுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரரையுடைதாயிருந்தால் நன்றாக செயல்பட முடியும். ஒவ்வொரு சபையும் அதன் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களை உடையவர்களாய் இருந்து முழுமையான வடிவமைப்பை அடையும்படி செயல்பட வேண்டும் என்பது கிறிஸ்துவின் திட்டமாக இருக்கிறது. வேதவாக்கியங்களின்படி அல்லாததும், வடிவமைக்கப்படாததுமான ஒரு சபையானது தகுதியுள்ள மனுஷர்கள் இருந்தும் அவர்களை அலுவர்களாக நியமிக்காமல் இருக்கிறது.

**3. வேதவாக்கியங்களுக்கு மாறாக வடிவமைக்கப்பட்டது**

இவ்வகையான பிராந்திய சபையானது நியமிக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்டதாக இருக்கிறது. ஆகையால் ஒழுங்குபடுத்தப்பட்டதாயிருக்கிறது. ஆனால் அந்த மனுஷர்கள் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள். இது இந்த விதமாக வேதவாக்கியங்களுக்கு மாறானதாய் இருக்கிறது. சில சபைகள் வடிவமைப்பதில் வேகமானவைகளாயிருக்கின்றன. அவர்கள் தகுதியடையும் முன்பே அலுவலர்களை நியமிக்கின்றன. இதில் அவைகள் அவர்களுக்கு மேலாக அதிகமான கேடுபாடுகளையும் இன்னும் உபத்திரவங்களையும் கொண்டு வருகின்றன. எவருமே தகுதியுடைவராய் இராவிட்டால் ஒரு சபையில் அலுவலர்கள் இல்லாமல் இருப்பது என்பது வேதவாக்கியங்களின் படியானதாயிருக்கிறது. ஆனால் மனுஷர்கள் தகுதியடையாத பட்சத்தில் அவர்களை மூப்பர்களாக நியமிப்பது வேதவாக்கியங்களுக்கு எதிரான காரியமாயிருக்கிறது. எல்லாவகையிலும் அலுவலர்கள் இல்லாதிருப்பதைப் பார்க்கிலும் அந்த ஒரு நிலைமை மிக மோசமானதாயிருக்கும். அது பிராந்திய சபையின் மேல் மிகுந்த உபத்திரவத்தையும் கேடுபாடுகளையும் கொண்டுவரும். வேதவாக்கியங்களுக்கு மாறாக ஒழுங்கு படுத்தப்பட்ட ஒரு சபையானது தகுதியற்ற நபர்கள் அலுவர்களாக நியமிக்கப்பட்ட சபையாக இருக்கிறது.

**4. வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்பட்டது**

வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்பட்ட சபையானது தகுதிவாய்ந்த மனுஷர்களை மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும், நியமிக்கப்பட்டதாக இருக்கிறது. சபையானது மனுஷர் தகுதியுள்ளவர்களாகும் வரை அவர்களை நியமிக்க மறுத்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சபை வடிவமைக்கப்பட்ட சபையாக இருக்கிறது. ஏனென்றால்; அது

மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் கொண்டாதாக இருக்கிறது. இது வேதவாக்கியங்களின்படி நடப்பட்டதாயிருக்கிறது. ஏனென்றால், இந்த அலுவலர்கள் சரியாக தகுதி பெற்றவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொரு சபையும் வேதவாக்கியங்களின்படி தகுதிவாய்ந்த அலுவர்களைக் கொண்டதாயிருக்கும்படியான காலத்தை நோக்கி கற்றுக்கொள்ளவும், கிரியை செய்யவும் கடவது. ஆனால் எவர் ஒருவரும் மெய்யாகவே மனுஷர்கள் தகுதியடைவதற்கு முன்பே அவர்களை நியமிப்பதற்கு அவசரப்பட வேண்டாம். மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான தகுதிகள் 1தீமோ.3ம் அதிகாரம் மற்றும் தீத்து 1ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அதிகாரங்கள் அதிகமாகபடிக்கப்படவேண்டியது தேவையானதாக இருக்கிறது. பின்வரும் பாடத்தில் ஒரு மூப்பருக்கான குணாதிசயங்களை குறிப்பிடத்தக்க விதமாக நாம் கற்றுக் கொள்ளத் தொடங்குவோம். சபைகள் அவைகளின் அலுவலர்களை நியமிப்பதில் இருக்கும் முன்னேற்றத்தின்படியே வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்படாததாக, வேதவாக்கியங்களின்படி அல்லாததும், வடிவமைக்கப்படாததுமாக, வேதவாக்கியங்களுக்கு மாறாக வடிவமைக்கப்பட்டதாக அல்லது வேதவாக்கியங்களின்படி வடிவமைக்கப்பட்டதாக இருக்கின்றன.

**கேள்விகள்**

1. ஒரு சபையின் நிலைமை சரியாக இருக்கிறது என்பதை காட்ட இது -------------- என்று நாம் சொல்கிறோம்.

2. ஒரு சபையானது அலுவலர்களை உடையதாய் இருக்கிறது என்பதை காட்ட அது ----- என்று நாம் சொல்கிறோம்.

3.ஒரு சபையின் நிலைமை தவறாக இருக்கிறது என்பதை காட்ட நாம் இது ------ என்று சொல்கிறோம்.

4. ஒரு சபையில் அலுவலர்கள் இல்லை என்பதை காட்ட நாம் அது -------------- என்று சொல்லுகிறோம்.

5. வேதாகமத்தில் நாம் வடிவமைக்கப்பட்ட மற்றும் வடிவமைக்கப்படாத சபைகளைக் குறித்து வாசிக்கிறோமா?------.

6. ஒரு சபை தகுதியுள்ள மனுஷர் இல்லாமலும், எவரும் நியமிக்கப்படாதிருந்தால் -------------.

7. ஒரு சபை தகுதியுள்ள மனுஷரை கொண்டாதாக இருக்கிறது ஆனால் எவர் ஒருவரும் நியமிக்கப்படவில்லை என்றால் அது ----------------.

7. ஒரு சபையானது தகுதியற்ற மனுஷரை நியமனம் செய்திருக்குமேயாகில் அது -------------.

9. ஒரு சபையானது தகுதிவாய்ந்த மனுஷரை நியமித்துக் கொண்டதாக இருக்குமேயாகில் அது ----------.

10. எந்த இரண்டு அதிகாரங்கள் அலுவலர்களுக்கான தகுதிகளை கொடுக்கின்றன.

## தெரிந்து கொள்ளுவோம் *சஹாரா பாலைவனம்*

**உலகிலேயே மிகப்பெரிய பாலைவனம் சஹாரா ஆகும். சஹாரா பாலைவனம் ஆப்பிரிக்காவில் உள்ளது. 'சஹாரா' என்ற சொல்லுக்கே பாலைவனம் என்றுதான் பொருள். இப்பாலைவனம் 30 இலட்சம் சதுரமைல்கள் பரப்பளவு கொண்டது. உலகின் உஷ்ணமான பகுதிகளில் சஹாராவும் ஒன்று. வருடத்தில் சுமார் 17 நாட்கள் தான் சஹாராவில் மழை பெய்கிறது. சஹாராவில் சில மலைகளும் மணல் பகுதியில் உள்ளன. சில மலைகள் 10 ஆயிரம் அடி உயரத்தில் கூட உள்ளன.**

*- K.R.K.Ravi Asir*

பெண்கள் பகுதி



*இயேசு கிறிஸ்து, நித்தியபலி*

Jesus Christ, The Eternal Sacrifice

## தலை மற்றும் அவருடைய சரீரம்

## The Head and Body

*-Betty*



"எப்படியெனில், சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே யிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1கொரி.12:12,27).

இந்த வசனம் ".... அந்தப்பிரகாரமாக கிறிஸ்துவின் சரீரம் இருக்கிறது" என்று மாத்திரம் கூறவில்லை, அது ஒன்றாகவே; இணைந்திருக்கிறது என்கிறது. ஆனால் இந்த வசனம், "... அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவுமிருக்கிறார்..." என்றும், தம்மை தலையாகவும் அவருடைய சரீரமாகிய சபையாகவும் அடையாளப்படுத்துகின்றார். இப்படியாக முழுவதும் கிறிஸ்து என்று அழைக்கப்படுகிற ஒன்றுபட்ட ஒன்றாகயிருக்கிறது.

நம்முடைய மனங்கள் அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கின மாதிரியையும் மற்றும் மனுஷனை பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்கும்படிக்கு தாமே சுமந்துதீர்த்த தம்முடைய இயற்கை நீதியையும் தெய்வீகத் தன்மையையும் பின்பற்றுகிறதா? தம்முடைய சொந்த நித்திய மகிமையைத் துறப்பதற்கும் மாம்சத்தில் பிறப்பதற்கும் இது அவருக்குப்போதுமானதாகயிருக்கவில்லை; நம்முடைய பாவங்களை தாமாக ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சிலுவையின் மூலம் மரணத்தின் அவமானத்தை சுமப்பதற்கு இது அவருக்குப் போதுமானதாகயிருக்கவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அநேகமாக இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபடியினால், அவர் தொடர்ந்து மனிதர்களாலான சரீரத்திற்கு மேலான தலையாக இருக்கும்படிக்கு தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

அடிக்கடி, மாம்ச சரீரத்தை அடிமைப்படுத்தக் கூடிய இன்னிசையைப் பார்க்கையில், நாம் சங்கிலியால் கட்டப்பட்ட பலமுள்ள சரீரத்தைக் கொண்டிருக்கும் பயத்தில் உள்ளுக்குள் நெளிகிறோம் அல்லது மனமுடைந்து அல்லது ஆரோக்கியமும், புத்தியுமுள்ள மனம் செயலிழந்துபோன சரீரத்தில் சிறைபட்டு போகிறோம். வயது முதிர்ந்த சிறையிருப்பு ஏறக்குறைய பீதியடையச் செய்கிறது. இப்படிப்பட்ட சிறையிருப்புகளுடன் வாழ்வது ஒவ்வொரு வருடமும் எப்பேர்பட்ட ஏமாற்றமும் மனமுடையதாயிருக்கும்.

### சரீரத்தினால் சுமந்த பாடுகள்

நாம் சிலநேரங்களில் அவருடைய செயலாக, சில சமயங்களில் ஆர்வமிக்கவர்களாக, சில சமயங்களில் சோம்பலாக, சில சமங்களில் எதிர்க்கிறவர்களாக, சில சமயங்களில் செயலிழந்தவர்களாக, சில சமயங்களில் இவ்வுலகில் செத்த சரீரமாக இருக்கிறபடியால் மெய்யான வழியில், நம்முடைய உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஒவ்வொரு நாளும் நம்முடைய தலையாக இருப்பதில் எல்லைக்குட்பட்ட தடைகளை அனுபவிக்கிறார்.

சரீரத்தோடுள்ள உறவில் தலையின் பங்கு என்ன? இது தன்னிச்சையான, தன்னிச்சையற்ற செயல்பாடுகளின், எண்ணங்களின் பிறப்பிடத்தின் முனையாக இருக்கிறது. தலை பார்க்கிறது, ஆசைப்படுகிறது, விரும்புகிறது; ஆனால் இது ஒன்றோடொன்று இணைந்து வேலைசெய்யும் சரீரத்தின் அங்கங்களை, பார்வையை நேர்படுத்தும்படிக்கு சார்ந்திருக்கவேண்டும்.

கிறிஸ்து அற்புதத்தினால் இருதயங்களை மாற்றும்படிக்கு பூமிக்கு இறங்கி வந்திருக்கிறாரா? தேவதூதர்கள் உலகத்தை சுற்றிவந்து சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்களா? இல்லை.

தேவன் ஆதியிலிருந்தே மனிதனுக்கு இரட்சிப்பின் வழியைத் திறக்கும் நோக்கத்திற்காகவே இவையெல்லாவற்றையும் செய்திருக்கிறார். கிறிஸ்து அந்த இலக்கை அடையும்படிக்கு மரித்தார்.

ஆனால் தேவன் பரலோகத்திலிருந்து ஜனங்களிடம் நேரடியாக பேசுகிறாரா? கிறிஸ்து இருதயங்களை மாற்றும்படிக்கு அற்புதங்களோடு இறங்கிவந்தாரா? தேவ தூதர்கள் உலகத்தைச் சுற்றிவந்து சுவிசேஷத்தைப் போதிக்கின்றார்களா? இல்லை.

பிறகு இவைகளெல்லாம் யாருடைய கரங்களில் உள்ளன? அவருடைய சரீரத்தின் கரங்களில். தலை உலகத்தைப் பார்க்கிறது; அவர் இழந்துபோனவர்களுக்காக ஏங்குகிறார்; எல்லாரும் சுவிசேஷத்தின் அன்பையும், இரக்கத்தையும் உணரவேண்டுமென அவர் விரும்புகிறார். மூளையிலிருந்து கண்களுக்கும், நாவிற்கும், கைகளுக்கும், கால்களுக்கு இருதயத்திற்கும் செய்திகள் அனுப்பப்பட்டு வருகிறது. அங்கே ஒருமித்த பிரதியுத்திரங்கள் காணப்படும்போது, அநாதி தீர்மானங்கள் நிறைவேறுகிறது என்று அவர் அறியவேண்டும் என்பது எப்பேர்பட்ட மகிழ்ச்சி!

ஆனால், தலையிலிருந்து செய்தி அனுப்பப்பட்டு, போதனைகளுக்கு செவிசாய்க்க தம்முடைய சரீரத்தின் அங்கங்கள் மறுக்கும்போது அவர் ஏமாற்றத்தையும் மன வேதனையையும் அனுபவிக்கவேண்டும் என்பதை நினைத்துப் பாருங்கள். எத்தனை முறை அவர் நம்முடைய சோம்பல் அல்லது செயலற்ற நிலையினால் சிறைப்படுத்தப்படுகிறார் என்பதை சிந்தியுங்கள். அவருடைய சரீரத்தின் அங்கங்கள் அவரைக் காட்டிக்கொடுத்து துரோகம் பண்ணும்போது எவ்வளவு மனவேதனை அடையவேண்டியுள்ளது என்பதையும், நம்முடைய வெட்கக்கேடான செயல்களால் எவ்வளவு அதிகமாக அவருடைய மகிமை அவதூறு செய்யப்படுகிறது என்பதையும் சிந்தியுங்கள். தேவனுடைய சாராம்சம், பொய், வஞ்சனை, ஒழுக்கங்கெட்ட வாழ்வு, தீமையான நினைவுகளில் சந்தோஷப்படுதல், கெட்டவார்த்தைகளைப் பயன்படுத்துதல், வீட்டைக் களைத்தல், திக்கற்றவர்களுக்கு உதவி செய்வதைத் தவிர்த்தல் போன்றவற்றில் அவர் விருப்பம் கொள்வாரா? அவருடைய சரீரமாக நாம் எதைச்செய்தாலும், அவருக்கென்றே நேரடியாகச் செய்வோமாக.

வாரந்தோறும், அவருடைய சரீரத்தில் பங்குகொள்ளுவதினால் அவருக்குள் நாம் ஜீவிக்கிறவர்களாவோம். அனுதினமும் நாம் அவருடைய சரீரமாக இருக்கிறபடியால் நாம் அவரில் ஜீவிப்போமாக!

# Gospel Preaching On Television

**Arjunan in Tamil:**
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV
Every Tuesday 6:00 - 6:30 pm on Tamilan TV
Every Thursday 6:00 - 6:30 pm on Heaven TV

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David
Sunday &Tuesday 7:00 - 7:30 pm & Friday
8.00 - 8.30 pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

**Philemon & Kingsley in Tamil:**
Every Sunday 7:00 - 7:15 am on Tamilan TV
Every Sunday 3:30 - 4:00 pm on Nambikkai TV
Every Satarday 9:00 pm on Joy TV

**Philemon & Kingsley in English:**
Every Sunday 2:00 - 2:30 pm on Salvation TV

**Rajanayagam in Tamil:**
Friday 7:30 - 8:00 pm on Nambikkai TV
Saturday 7:00 - 7:30 am on Tamilan TV




**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00 pm on Subhavartha Channel
Every Thursday at 2:30 pm on Rakshana Channel
Every Saturday at 6:30 am on Aradhana Channel
Every day at 6:30 am & 3:00 pm on Kanthi TV in A. P. only.
MAHA News Channel Friday at 6:30 am

**Thang Lien in Manipur:**
TC Net Work
Monday 6:30 - 7:00 pm
Wednesday 6:00 - 7:00 pm
Friday 6:00 - 7:00 pm

**Amul Bansod - Aurangabad (Marathi):**
MCN News Channel Monday, Wednesday, Friday
7:30 - 8:00 am

# நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்
# You Will Be Exalted

-Glory Arjunan



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

பெண்களாகிய நாம் எப்போதுமே உயர்த்தப்படுவதைத்தான் விரும்புவோம். யாருமே தாழ்ந்த நிலைக்கோ அல்லது ஆசீர்வாதங்களை இழந்த நிலைக்கோ தள்ளப்படுவதை விரும்பமாட்டோம். உத்தியோகத்தில் இருக்கும் ஸ்திரீகள் தங்களுக்குப் பதவி உயர்வு வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர் எல்லோருமே பதவி உயர்வு (Promotion) க்காகக் காத்திருப்பதில்லை. யாரெல்லாம் தங்களுடைய பதவியில் உயர்நிலைக்கு வரவிரும்புகின்றனரோ, அவர்களெல்லாம் அதற்கான கல்வித் தகுதியுடன் காத்திருப்பர் இவ்வுலக உத்தியோகத்தில் ஏற்ற கல்வித் தகுதி இருந்தால்தான் பதவி உயர்வினைப் பெற முடியும். இப்படியிருக்க, ஆவிக்குரிய ஸ்திரீகளாகிய நாம் தேவாதி தேவனால் உயர்த்தப்பட வேண்டுமானால், நமக்கும் சில ஆவிக்குரிய தகுதிகள் தேவை என்று தானே கூறவேண்டும். ஆம் தேவனால் நாம் உயர்த்தப்பட நமக்குத் தேவையான தகுதிகள் என்னவென்று வேதத்தின் துணைகொண்டு ஆராய்வோம்.

**முதலாவது, கர்த்தருக்கு முன்பாக உங்களைத் தாழ்த்துங்கள் (Humble yourselves in the sight of the Lord)** யாக்கோபு 4:10 "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" என்று சொல்லுகிறது. அநேக விஷயங்களில்நாம் பெருமையுள்ளவர்களாகக் காணப்படுகிறோம். கிறிஸ்துவை அறியாத ஓர் ஸ்திரீ பெருமையுடன் காணப்பட்டால், அது அவர்களது அறியாமை என நினைக்கலாம். ஆனால் கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நாமோ தேவனுடைய சுத்த கிருபையினால் மட்டுமே நிலைநிற்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் இரட்சிக்கப்பட்டிருப்பது அவருடைய கிருபை (எபே.2:) அது நமக்குக்கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய ஈவு. நம்மில் "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறவரும் இயேசுவே!" (எபி.12:1). "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் பெருமையுள்ளவர்களுக்கோ எதிர்த்துநிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (யாக்.4:6) என்று வாசிக்கிறோம். ஆயக்காரனின் ஜெபத்தினைக் குறித்து லூக்கா 18:10-1 வசனங்களில் வாசிக்கும்போது வசனங்கள் 13 மற்றும் 14ல் "...தன் கண்களையும் வானத்தக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். ...இவனே நீதி மானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ... தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (இயேசு). மேலும் இயேசுவினிடத்தில் தன் மகள் பிசாசின் பிடியிலிருந்து நீங்கி ஆரோக்கியமடைய

வேண்டுமென்று வேண்டிக்கொண்ட கானானிய ஸ்திரீயுங்கூட தன்னை ஒரு நாய்க்குட்டிக்குச் சமமாக்கி தாழ்த்தி தன் மகளுக்கு சுகத்தைப் பெற்றுக் கொண்டாள் (மத்.1:22-27). இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கிமடைந்தாள். இயேசுவும் கூட "தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிக்கும் மேலாக அவரை உயர்த்தி" (பிலி.2:7-9) என வாசிக்கிறோம். பாருங்கள், இவ்விதமாக நாம் நம்மைத் கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தும்போது உயர்த்தப்படுவோம்.

**இரண்டாவதாக, தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள் (Submit yourselves to God)** யாக்.4:7ல் "... தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்..." என்று வாசிக்கிறோம். தினம் வேதம் வாசிக்கிறோம், ஜெபிக்கிறோம், சபைக்குச் செல்லுகிறோம் என்றெல்லாம் கூறவோம். ஆனால் எவ்விதமாக தேவனுக்குக் கீழ்ப்படிகிறோம்? "...பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" (யாக்.2:19). வேதம் அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் எனக் கூறுகிறது. நாம் உயர்த்தப்படவேண்டுமானால் இவ்விதமாகத்தான் அடங்கியிருக்கவேண்டும். பெற்றோர்கள் தங்களுடைய சிறுபிள்ளைகளை வெளியில் அழைத்துச் செல்வர் தங்களுடைய அன்பின் பிள்ளைகள் காணமால் போய்விடக்கூடாது என்று மிகக் கவனத்துடன் அழைத்துச் செல்வர். இவ்வுலகத்தின் பிதாக்களே தங்கள் பிள்ளைகள் மேல் இவ்வளவாய் கவனம் செலுத்தும்போது, நம்மை உண்டாக்கின நம் பரம பிதாவானவர் நம்மேல் எவ்வளவு அதிகமாய் கவனம் செலுத்துவார்! எனவே தான் வேதம் "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (Humble yourselves in the mighty hand of God) என்று கூறுகிறது.

அழகிய வண்ணத்துப் பூச்சிகளை பார்த்திருக்கிறோம். அவைகள் உருவாகும் விதத்தை அறிவீர்களா? அவைகள் இலைகளின் மேற்பரப்பில் முட்டைகளையிட்டு, சிறிது காலம் கழித்து புழுக்களாகி, கூட்டுப்புழுக்களாக கூட்டிற்குள் தனக்கு இறக்கைகள் உருவாகும்வரை அடங்கியிருக்கும். இறக்கைகள் நன்கு உருவாகி பறக்கக்கூடிய வளர்ச்சி வந்தபின் கூட்டினை உடைத்துக் கொண்டு பல வண்ணங்களில் ரம்மியமாக பறக்கும்படி வெளிவருக்கின்றன. இறக்கைகள் சரியாக உருவாகுவதற்கு முன் வெளிவருவதில்லை, யாரேனும் அவைகளுக்கு உதவிசெய்வோம் என்று அக்கூட்டினை சிறிதளவு உடைத்து அது எளிதாக வெளிவரட்டும் என முயலுவோமானால், கூட்டுப் புழுப்பருவத்தில் முதிர்ச்சியற்ற நிலையில் அது வெளிவந்து பறக்கமுடியாமல் ஊறிச்சென்று மிதிபடும். இது மதியீனம்! தேவன் நம்மிடம் அவருடைய பலத்த கைக்குள் அடங்யிருந்து ஆசீர்வாதம் அல்லது உயர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நாம் ஒரு காரியத்திற்காக முயற்சிக்கும் போதும், ஜெபிக்கும் போதும் அந்த காரியம் உடனே கைகூடிவரவேண்டும் என்று நினைக்கிறோம். அதன் விளைவு வண்ணத்துப்

பூச்சிக்கு நேரிட்ட கதிதான் என்பதை மறந்துபோய்விடக்கூடாது. கர்த்தர் நல்லவர் அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தால் ஏற்றவேளையில் உயர்த்தப்படுவோம்.

கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோலவே இன்னொரு வருக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று வேதம் விரும்புகிறது. இது கர்த்தருக்குப் பிரியமானதாக இருக்கும். எபேசியர் 5:22 மற்றும் 24 ம் வசனங்களை வாசிக்கும்போது இவ்விதமாக வாசிக்கிறோம். "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்" (வசனம் 22) "ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல எந்தக்காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்" (வசனம் 24). கர்த்தருக்குப் கீழ்ப்படிகிற ஒவ்வொரு மனைவிமாரும் இவ்விதமாக கீழ்ப்படிந்திருப்போமானால் கிறிஸ்தவக் குடும்பங்களில்இன்று பிரச்சனைக்கேஇடமிருக்காது. அஞ்ஞானிகளுக்குள் காணப்படுகிற விவாகரத்து (Divorce) போன்ற வெட்கக்கேடான செயல் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுவது தேவனுக்கு ஏற்புடையதாயிராது. தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் கீழ்ப்படிகிறதுபோல ஒவ்வொரு மனைவிமாரும் தங்களுடைய சொந்தப்புருஷருக்கும் கீழ்ப்படிந்து இருப்போம். "இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள். நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள். வேதவசனத்தின்படி கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி தேவனுக்குக் கீழ்ப்படிந்து அடங்கியிருப்போம். ஏற்றகாலத்தில் உயர்த்தப்படுவோம்.

**கடைசியாக, சகோதரிகளே, பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் - Resist the evil :** ஆம், நாம் பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். ஆதி முதற்கொண்டு பிசாசானவன் ஸ்திரீகளை எளிதில் வஞ்சித்து தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்படி செய்து சாபத்திற்கு உட்படுத்துகிறவனாய் இருக்கிறான். முதல் மனுஷியாகிய ஏவாளை சந்தித்து, தந்திரமாய் பேசி, கர்த்தரிட்ட கட்டளையை மீறும்படி செய்து பூமி சபிக்கப்பட காரணமானான். "பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்" (ஆதி.3:17) என்று கர்த்தர் சொன்னார். "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேது.5:8). எனவே அவனுடைய தந்திரமான சகலவற்றிற்கும் தப்பித்துக்கொள்ளும்படி "...பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" (யாக்.4:7) என வேதம் கூறுகிறது. நாம் அவனுக்கு எப்படி எதிர்த்து நிற்கலாம் என்பதற்கு நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான் நல்மாதிரியாக இருக்கிறார். ஏனெனில் பிசாசானவன் இயேசுவையும் சோதித்தான் என்று மத்.4:3-10 மற்றும் லூக்.4:2-12


லுள்ள வசனங்களில் காணமுடிகிறது. ஆனால் நமது ஆண்டவராகிய இயேசுவோ தேவனுடைய வசனத்தினால் அவனை ஜெயித்தார். அவருக்குப் பசியுண்டான போது "...நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்" (மத்.4:3) ஆனால் இயேசுவோ தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் மனுஷன் பிழைப்பான் என்று சொல்லி (வச.4) ஜெயித்தார்.

மீண்டும் பிசாசு "... நீ தேவனுடைய குமாரனேயானால் என்று ஆரம்பித்து இங்கேயிருந்து தாழக்குதியும், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு துதர்கள் உம்மை தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்று எழுதியிருக்கிறதே என்றான், "அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" (வச.6,7) என்று சொல்லி அவனை ஜெயித்தார். மீண்டும் பிசாசு இயேசுவை நேக்கி: "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால் இவ்வுலகத்தின் சகல ராஜ்யங்களையும் மகிமையையும் உமக்குத் தருவேன் எனக்கூறினான், அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே, ",...உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்று சொல்லி ஜெயித்தார் (வச.8-10) அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான் (வச.11)

பாருங்கள், நமதாண்டவராகிய இயேசுவை சோதித்த பிசாசு நம்மையும் சோதிப்பது அதிக நிச்சயமல்லவா! எனவே உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூர்ந்து, பிசாசினால் வரும் இச்சைகளுக்கு அடிபணிந்து விடாமல் இயேசுவைப்போல பிசாசுக்கு எதிர்த்து நிற்போம், அப்பொழுதுஅவன் நம்மை விட்டு ஓடிப்போவான். தெளிந்தபுத்தியுள்ளவர்களாய், விழித்திருந்து பிசாசை ஜெயிப்போம்.

அன்பு சகோதரிகளே, கர்த்தருக்கு முன்பு நம்மைத் தாழ்த்துவோம், அவருடைய பலத்த கைக்குள் அடங்கி கீழ்ப்படிந்திருப்போம், பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். அப்பொழுது ஏற்றவேளையில் கர்த்தர் நம்மை உயர்த்துவார். உலகம் உங்களை மேற்கொள்ளாதபடி இப்புத்தாண்டில் நீங்கள் உயர்த்தப்பட தேவன் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக! ஆமென்.

- புதிய வருடத்தை நமக்கு ஆசீர்வதித்துக்கொடுத்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- புதிய வருட ஊழியங்களுக்காக...
- கடைசி காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் கர்த்தருக்குப் பிரியமாய் வாழ...
- சபை சத்தியத்தில் பெலப்பட...
- சுவிசேஷம் தடையில்லாமல் பிரசங்கிக்கப்பட...
- நமது டெலிவிஷன் ஊழியத்திற்காக...
- தேவசித்தம் பூமியிலே தொடர்ந்து செயல்பட...



ஜெபியுங்கள்




**The Word of Christ**
**Canara Bank A/c No.094620100552**
**IFSC:CNRB0000946**

மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

சிறுவர் பகுதி



# நோவா - Noah

ஹலோ குட்டீஸ்! எப்படியிருக்கிறீங்க? ஒரே ஜாலி தான். புத்தாண்டு சுவீட்ஸ், புத்தாண்டு dress என்று ஒரே ஜாலியாக இருப்பீங்க! அப்படித்தானே? O.K. குட்டீஸ். உங்கள் எல்லாருக்கும் `Happy New Year'.

இன்றைக்கு, நோவா என்ற ஒருத்தரைப் பற்றித்தான் தெரிந்துகொள்ளப் போகிறோம். இந்த நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. ஏன் தெரியுமா? இவர், அந்த நாட்களில் வாழ்ந்து வந்த எல்லா மனுஷருக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தாரு. அது மட்டுமா? இவர் எப்போதும் தேவனோடு உறவாடிக்கொண்டேயிருந்தாராம். நீங்ககூட உங்கள் நண்பர்களோடே அதிகமான நேரத்தை செலவழிப்பீங்க நேரம் போறதே உங்களுக்குத் தெரியாது. அப்படித்தானே? இதைப்பார்க்கிலும் இந்த நோவா தேவனோடே ரொம்ப நெருக்கமாக இருந்திருக்கிறாரு. அதனால் இவருக்கு கர்த்தருடைய கண்களில் இரக்கம் கிடைத்தது. அந்த நாட்களில் கர்த்தர் தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டாரு. கர்த்தருக்கு ரொம்ப கவலையாயிருந்தது. ஏன் தெரியுமா? எல்லா மனுஷரும் ரொம்ப ரொம்ப பாவஞ் செய்தாங்க அவங்க இருதயம் பொல்லாததாயிருந்தது. அக்கிரமம் செய்தாங்க இதையெல்லாம் பார்த்து கர்த்தர் விசனப்பட்டு பூமியை அழிக்கப்போவதாக நோவாவிடம் கூறினாரு.

இன்றைக்கும் மக்கள் கெட்டவர்களாகத் தானே வாழ்கிறாங்க. கொலை, கொள்ளை, திருட்டு இன்னும் எத்தனை எத்தனையோ கெட்ட செயல்களெல்லாம் செய்றாங்க அதனால் தான் கர்த்தர் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன் என்று சொல்லிட்டாரு. ஆனா, நோவா நல்லவவராக உத்தமராக, நீதிமானாக இருந்தாரு இல்லையா! அதனாலே நோவா மேல் கர்த்தர் இரக்கப்பட்டு நோவாவைப் பார்த்து, நீ ஒரு பெரிய பேழையைக் (Boat) கட்டி, அதற்குள்ளே நீ, உன் மனைவி உன் மகன்கள் மூன்றுபேரும், உன் மருமகள்கள் மூன்று பேருமாக, நீங்க எட்டுப்பேரும் இந்த பேழைக்குள்ளே ஏறிக்கொள்ளுங்கள். உங்களோடே உணவுப் பொருட்கள் , மிருகஜீவன்கள், பறவைகள் போன்றவற்றையும் ஏற்றிக் கொள்ளுங்கள் நான் பூமியின் மேல் மழையைப் பெய்யப்பண்ணி பெருவெள்ளம் உண்டாகப் பண்ணி எல்லாவற்றை அழித்துவிடுவேன் என்று சொல்லி, அதன்படியே அழித்து விட்டாரு. அந்த பெரிய Boat ல ஏறின நோவாவும் அவருடைய குடும்பமும் மாத்திரம் வெள்ளத்திற்குத் தப்பி காக்கப்பட்டார்கள்.

ஏன் தெரியுமா? நோவா அந்த நாட்களில் கர்த்தருக்குள் பிரியமான நீதிமானாகவும், உத்தமனாகவும், வாழ்ந்தான் அதனால் கர்த்தர் அவனையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்றினார். பார்த்தீர்களா? கர்த்தர் எவ்வளவு பெரியவர்! மேலும் கர்த்தர் வானத்திலே வானவில்லை வைத்து இனிமேல் இந்தபூமி அனைத்தையும் பெருவெள்ளத்தால் அழிக்க மாட்டேன் என்பதற்கு இது அடையாளமாயிருக்கும் என்று சொல்லிட்டாரு. ஆமா, தம்பி, தங்கைகளே, நாமும் நோவாவைப்போல கர்த்தருக்கு முன்பாக நல்லவர்களாக இருந்தா நம்மையும் கர்த்தர் எல்லா அழிவிலிருந்தும் காப்பாற்றுவார். இனி, கர்த்தருக்குப் பிரியமா நடப்பீங்களா? நல்லது. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மனப்பாடவசனம்**

**"நோவா.... நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தான்"... - ஆதியாகமம் 6:9**

## வேத அறிவுப் போட்டி எண்: 257

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற எதைப்போலவும்... அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்?
2. எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமலும், ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும், அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினால் அந்த வாக்கியங்களை என்ன செய்தார்கள்?
3. உன் மகுடவர்த்தனர் வெட்டுக்கிளிகளுக்கும், உன் தளகர்த்தர் பெருங்கிளிகளுக்கும் எப்படியாயிருக்கிறார்கள்?
4. நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச்செய்கிறது என்ற அப்போஸ்தலன் யார்?
5. அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார் என்று எழுதிய தீர்க்கதரிசி யார்?
6. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் எதை உண்டாக்காது?
7. கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே எப்படி அலறுவான்?
8. வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகுமா?
9. கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் எப்படியிருக்கும்?
10. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல்... வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் எப்படிப்பட்டவனாயிருக்கக்கடவன்?

## வேதாகம ஆய்வு... 42

**ஏசாயா - Isaiah**

1. யெகோவின் இரட்சிப்பு என்று அர்த்தம்.
2. இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளெல்லாரிலும் பிரதானமானவன்.
3. ஏசாயா புஸ்தகத்தை இயேசுவிடம் கொடுத்தார்கள் – லூக்.4:17
4. மந்திரி ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்தான் – அப்.8:28
5. ஏசாயா கடைசியில் இரத்த சாட்சியாக மரித்ததாகச் சொல்லப்படுகிறது.



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
January 2022

## தமிழ்நாடு கிறிஸ்து வின் சபை
## ஊழியத் தம்பதியர் ஐக்கியக் கூட்டம்



இடம்

வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடும் வளாகம்
கெத்செமனே கார்டன்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

*Every Tuesday 6.00 P.M on Tamilan TV*
*Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV*
*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



